<u>பிரசார் பாரதி</u>

<u>அகில இந்திய வானொலி, சென்னை - 4</u>

**18 10 2026** **12 40**

ஞாயிற்றுக்கிழமை நண்பகல்

ஆகாஷ்வாணி

**(Tune)**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கொல்கத்தா துர்கை பூஜையின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் காயமடைந்தவர்களை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

2. ஒடிசா மாநில ஆளுநராக திரு. **Braj Mohan Ram** இன்று பதவியேற்றார்.

3. மத்தியப்பிரதேச மாநிலம் குவாலியரில் நேரிட்ட சாலை விபத்தில் **12** பேர் உயிரிந்துள்ளனர்.

4. விலைவாசி உயர்வை கண்டித்து பிரான்ஸ், இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் லட்சக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

5. தில்லியில் நடைபெற்ற **Half Marathon** போட்டியின் இந்தியர்களுக்கான ஆடவர் பிரிவில் **Shailesh Kushwaha** தங்கப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><>

கொல்கத்தா துர்கை பூஜையின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் காயமடைந்தவர்களை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, மேற்குவங்க முதலமைச்சர் திரு. சுவேந்த் அதிகாரி உள்ளிட்டோர் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த 19 பேரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பதாக திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

இதனிடையே, துர்கை பூஜையின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக காவல்துறையினர் 7 பேரை கைது செய்துள்ளனர்.

துர்கை பூஜை விழாக்குழு செயலர் மற்றும் இதனை ஒருங்கிணைத்தவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வருவதாக கொல்கத்தா காவல்துறை தெரிவித்துள்ளது.

<><><><><><><><><>

ஒடிசா மாநில ஆளுநராக திரு. **Braj Mohan Ram** இன்று பதவியேற்றார்.

புவனேஸ்வர் மக்கள் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒடிசா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி **Harish Tondon** அவருக்கு பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு. **Mohan Charan Majhi,** பேரவைத் தலைவர் திருமதி. **Surama Padhy** உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<><><><><><><><><><>

மத்தியப்பிரதேச மாநிலம் குவாலியரில் நேரிட்ட சாலை விபத்தில் **12** பேர் உயிரிந்துள்ளனர்.

**Chinaur** சாலையில் கட்டுப்பாட்டை இழந்த ட்ரக் பக்தர்கள் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் காயமடைந்த **39** பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சாலை விபத்தில் உயிரிழந்த குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திரமோடி உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தலா **2** லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு **50** ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு 2 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் கூறியுள்ளார்.

<><><><><><><><><><>

திரிபுரா மாநிலம் அகர்தலாவில் இந்திய ராணுவப்படை அக்னிவீர் ஆள்சேர்ப்பு முகாமை நடத்தியது.

ஐந்து நாட்கள் நடைபெற்ற இந்த முகாமில் ஆயிரத்து 203 பேர் கலந்து கொண்டுள்ளனர்.

**Silchar** ராணுவ ஆள்சேர்ப்பு அலுவலகம் சார்பாக இந்த முகாம் நடைபெற்றது.

<><><><><><><><><><>

ஆயுத பூஜை பண்டிகையொட்டி சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

திருவனந்தபுரம் வடக்கு ரயில் நிலையத்தில் இருந்து நாளை மறுநாள் இரவு 8 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், நாகர்கோவில், திருநெல்வேலி, மதுரை, திருச்சி வழியாக மறுநாள் காலை 11 மணிக்கு தாம்பரம் வந்தடையும்.

மறுமார்க்கத்தில் வரும் புதன்கிழமை தாம்பரத்தில் இருந்து பிற்பகல் 2 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், மறுநாள் காலை 5 மணிக்கு திருவனந்தபுரம் வடக்கு ரயில் நிலையம் சென்றடையும்.

நாகர்கோவிலில் இருந்து நாளை மறுநாள் இரவு 9 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் மறுநாள் காலை 9-55-க்கு சென்னை எழும்பூர் வந்தடையும்.

<><><><><><>

விலைவாசி உயர்வை கண்டித்து பிரான்ஸ், இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் லட்சக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிரான்சில் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை கண்டித்தும், ஊதிய உயர்வு வழங்கக் வலியுறுத்தியும் 5 லட்சத்திற்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

மாணவர்களின் போராட்டத்திற்கு பின்னர் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கூட்டமாக சென்று, கடைகள் மீது வன்முறை செயல்களில் ஈடுபட்டு பொருட்களை எடுத்துச் சென்றதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தில் ஆயிரத்து 200 -க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரான்ஸ் பிரதமர் திரு. Sebastien Lecornu தெரிவித்துள்ளார்.

பாரீஸ், Marseille, Nice உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் கடைகள் சூறையாடப்பட்டதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**Limoges** நகரில் வரலாற்று சிறப்புமிக்க நகராட்சி மண்டபத்தை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சேதப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மெக்ரான் தெரிவித்துள்ளார்.

பெல்ஜியத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது காவல்துறையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர்.

இத்தாலியில் **Milan** உள்ளிட்ட நகரங்களில் மக்கள் விலைவாசி உயர்வுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வன்முறையில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்த காவல்துறையினர் தண்ணீரை பீய்ச்சி அடித்தனர்.

இந்த வன்முறை சம்பவங்களுக்கு இத்தாலிய பிரதமர் திருமதி. **Giorgia Meloni** கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

போர்ச்சுக்கல் தலைநகர் **Lisbon -**ல் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

<><><><><><><><><><>

உலக மாதவிடாய் நிற்றல் தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது. பெண்களுக்கு மாதவிடாய் நிற்கும் காலத்தில் ஏற்படும் உடல் மற்றும்

மனரீதியான மாற்றங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்தினத்தின் முக்கிய நோக்கமாகும்.

மாதவிடாய் நிற்கும் காலத்தில் பெண்கள் தங்களை பராமரித்துக் கொள்ளும் முறை குறித்து சென்னையை சேர்ந்த மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவர் ஸ்ரீகலா பிரசாத், எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

<><><><><><>

எந்தவொரு நாட்டின் வற்புறுத்தலுக்கு பணிந்து இறையாண்மை உரிமைகளை கைவிடுவதாக இல்லை என்று ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் **Seyed Abbas Araghchi** தெரிவித்துள்ளார்.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், அமைதிக்கான பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக கூறியுள்ளார்.

ஹோர்மூஸ் நீரிணை வழியாக கப்பல்கள் பாதுகாப்பாக செல்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ஈரான் முன்வைத்த நிபந்தனைகள் அமெரிக்கா ஏற்றுக்கொண்டால் ஒரு வாரத்திற்குள் ஹோர்மூஸ் நீரிணை கப்பல் போக்குவரத்திற்காக திறக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

நாட்டின் இறையாண்மைக்காகவும், மக்களின் பாதுகாப்புக்கும் ஈரான் தொடர்ந்து போராடும் என்று திரு. **Seyed Abbas Araghchi** தெரிவித்துள்ளார்.

<><><><><><>

ரஷ்யா மீதான பல்வேறு வர்த்தக தடைகள் அமல்படுத்துவதை நிறுத்தி வைப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நலனுக்காக இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

உலகளாவிய பொருளாதார நெருக்கடிக்கு ஏற்ப, இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Marco Rubiu** தெரிவித்துள்ளார்.

கடந்த செப்டம்பர் மாதத்தில் ரஷ்யா மீதான இந்த வர்த்தக தடைகளுக்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்திருந்தது.

அதிபர் டோனல்ட் ட்ரம்பின் முடிவுக்கு அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மேலும், அமெரிக்காவின் இந்த நடவடிக்கை குறித்து யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் செலன்ஸ்கி கவலை தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அமெரிக்காவின் நடவடிக்கையை வரவேற்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

<><><><><><>

தில்லியில் நடைபெற்ற **Half Marathon** போட்டியின், இந்தியர்களுக்கான ஆடவர் பிரிவில் **Shailesh Kushwaha**-வும், மகளிர் பிரிவில் **Ankita Dhyana**-வும் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் பிரிவில் கென்யாவின் **Charles Matata**-யும் மகளிர் பிரிவில் எத்தியோபியாவின் **Alemu**-வும் பதக்கங்களை வென்றனர்.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று கோவா **Churchill Brothers** அணி - ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

**Margao**-வில் இந்த போட்டி மாலை **5** மணிக்கு தொடங்குகிறது.

குவாஹத்தில் இரவு **7-30** மணிக்கு நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை - கேரள அணியை எதிர்கொள்கிறது.

---------------

இந்தியா-ஜிம்பாப்வே அணிகளுக்கிடையேயான இரண்டாவது மகளிர் டுவென்ட்டி-டுவென்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ராய்ப்பூரில் இப்போட்டி இரவு 7 மணிக்குத் தொடங்குகிறது.

--------------

ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகள் ஜப்பானின் **Aichi Nagoya** -வில் இன்று தொடங்குகிறது.

பிற்பகல் இரண்டரை மணிக்கு நடைபெறும் இப்போட்டியின் தொடக்க நிகழ்ச்சியில் இந்தியா சார்பில் பேட்மிண்டன் வீரர் **Pramod Bhagat**-ம், தடகள வீராங்கனை **Simran Sharma**-வும் தேசியக்கொடியை ஏந்திச் செல்ல உள்ளனர்.

இந்தியா சார்பில் 168 வீரர்-வீராங்கனைகள் போட்டியிடுகின்றனர்.

---------------

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நடைபெற்று வரும் 23 வயதுக்குட்பட்டோருக்கான 6-வது இந்தியன் ஓபன் தடகளப் போட்டி இன்று மாலை நிறைவடைகிறது.

மூன்று நாட்கள் நடைபெற்ற இப்போட்டியில் டிக்தலான், ஹெப்டதலான், குண்டெறிதல் உட்பட பல்வேறு பிரிவுகளில் வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

இளம் தடகள வீரர்களின் திறமையை வெளிப்படுத்தும் முக்கியப் போட்டியாக இது அமைந்தது.

<><><><><><>